**கவனிக்க** .- 17.05.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1812 - 2013 මැයි මස 23 වැනි වැනි බ්‍රහස්පතින්දා - 2013.05.23

1812 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 454 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 455 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 455 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 456 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) தொலைத் தொடர்பு அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2013 இன் இல. 180

டிஆர்எப்/ஆர்ஈசீரீ/1076/ஏவை.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2010, சனவரி 03 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து மருத்துவ காரணங்களின் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

பிரிகேடியர் சுரவீர ஆரச்சிகே தொன சிரியானி வருஷவிதாரன, யூஎஸ்பீ (உ/60046)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2009, ஒற்றோபர் 02.

5-596

---

2013 இன் இல. 181

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/பீஆர்ஓ/சீஓஎல்/06.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் பதவி உயர்வுகளும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

1. பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2005, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் லெப்டினன்ட் கேர்னல் பதவியில் பதவி நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக லெப்டினன்ட் கேர்னல் கோரல கமகே மாலன் சுஜீவ பெர்னாந்து, இபஉப

**பதவி உயர்வுகள்**

பின்வரும் பெயர்களுடைய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 2013, சனவரி மாதம் 10 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் தற்காலிக கேனல் பதவிக்கு பதவி உயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

(அ) லெப்டினன்ட் கேர்னல் எச் எம் என் பீ ஹேரத், இசிரெ
(ஆ) லெப்டினன்ட் கேர்னல் சீ எச் எம் சீ பீ சந்திரசேகர கரெ
(இ) லெப்டினன்ட் கேர்னல் டப் எம் சீ பண்டார இசிரெ
(ஈ) லெப்டினன்ட் கேர்னல் கே ஜீ எம் எஸ் பெர்னாந்து இபஉப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 20.

5-595

---

2013 இன் இல. 182

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/317.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிலையை உறுதிப்படுத்தலும் இளைப்பாறுதலும்

**நிலையை உறுதிப்படுத்தல்**

பின்வரும் மகளிர் உத்தியோகத்தர் 2013, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவி நிலையில் உறுதிப்படுத்தப்படுவதை அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் வாசல முதியன்சேலாகே விஜிர ரன்மெனிக்கே தர்மபால எதிரிசிங்க, இபொ (உ/64659)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தர் 2013, மே 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் வாசல முதியன்சேலாகே விஜிர ரன்மெனிக்கே தர்மபால எதிரிசிங்க, இபொ (உ/64659)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, சனவரி 18.

5-594

*2013 இன் இல. 183*

*எம்ஓடி/டீஈஎப்/2/01/ஏஈ/சீஓ.ஆர்/304.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தரைப்படை நிரந்தர படையிலிருந்து கட்டாய இளைப்பாறுதல்*

**இளைப்பாறுதல்**

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2005, திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து கட்டாய இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*கப்ரின் ரத்நாயக்க முதியன்சேலாகே மஹிந்த ரத்நாயக்க, ஆர்எஸ்பீ, விகாப (உ/60883)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2012, சனவரி 15.*

*5-697*

*டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3049.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தரைப்படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர், 2009, மே மாதம் 05 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*லெப்டினன்ட் கிரிஷ்ணதாச முதியன்சேலாகே மிலந்த தமித பண்டார, கொரெ (உ/ 65841)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2010, மார்சு 03.*

*5-549*

---

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2013 இன் இல. 184*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :*

*இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. அஜந்த குமாரசிறி அவர்கள், 2013, மார்ச் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.*

*5-639*

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**முல்லைத்தீவு மாவட்டம் - வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் - 2013**

*மேற்படி பொங்கல் உற்சவம் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு ஆரம்பமாகி 2013 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு முடிவடையும் என்பது பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.*

*2. 1949.05.27 ஆந் திகதியும் 9978 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 1950.05.26 ஆந் திகதியும் 10105 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.*

*3. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தின்போது அமுல்படுத்தப்படும்.*

*நா. வேதநாயகன்,*
*அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,*
*முல்லைதீவு மாவட்டம்.*

*2013, மே 01.*

*5-532*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான “செசானொ ஷு கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்” இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2006.09.13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட “செசானொ ஷு கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்” எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது ‘‘செசானொ ஷு கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்’’ எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி தூவாலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவாலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 9469
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2013 மே 03.

5- 564

---

## கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ சபையால் 2013, மாச்சு மாதம் 01 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது பின்வரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வென்னப்புவ, கிழக்கு தும்மலதெனிய, இல. 100 என்னும் இடத்தைச் சேர்ந்த மற்றும் நயினமடம, கிழக்குநயின மடம, ‘‘சுமேதா’’ என்னும் இடத்தைச் சேர்ந்த முதுநாமகொன்னகே மேரியன் ஸ்லெட்டன் மறுபெயர் முதுநாமகொள்ளகே மேரியன் ஸ்லெட்டன் சுமேதா பெர்னாந்து என்பவர் (இதன் பின்னர் ‘‘ஈடுவைப்பவர்’’ என அழைக்கப்படும்) யூனியன் வங்கியிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாதலாலும் சொல்லப்பட்ட வசதிகளின் காரணமாக குறித்த ஈடுவைப்பவர், நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. ஏ. எல். பீ. தம்மிக சில்வா அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1603 ஆம் இலக்க 2011.10.27 ஆந் திகதிய ஈட்டு முறியை நிறைவேற்றி இதன் கீழ் அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள ஆதனத்தை யூனியின் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய ஒரு கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சம் (ரூ. 1,45,00,000) ரூபா தொயும் அதன் மீதான வட்டியையும் மீளச் செலுத்துவதற்குப் பிணைப் பொறுப்பாக ஈடுவைத்து பிணைக்கு வைத்துள்ளதாதலாலும், அதன்படி மேற்குறித்த கடன் மீது 2012.08.30 ஆந் திகதிக்கு ஒரு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து முந்நூற்று இருபது ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 1,41,72,320.94) தொகையொன்றும் அதன்மீது 2012.08.31 ஆந் திகதி தொடக்கம் ஆதனத்தை விற்பனை செய்யும் திகதி வரை ஆண்டொன்றுக்கு காலாவதியாகிய வட்டியும் சொல்லப்பட்ட ஈடுவைப்பவரிடமிருந்து கொழும்பு யூனியன் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் இருக்கின்றதாதலாலும்,

கொழும்பு யூனியன் வங்கியின் பணிப்பாளர் சபை, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் சொல்லப்பட்ட கொழும்பு யூனியன் வங்கியிடம் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைவாகவும் அதன் கீழும் செயல்பட்டும் சொல்லப்பட்ட கடன் தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதில் சொல்லப்பட்ட ஈடுவைப்பவர் தவறுகை புரிந்துள்ளாரெனத் திருப்திப்பட்டும் மேற்கூறிய கடன் வசதியின் மீது ஒரு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து முந்நூற்று இருபது ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 1,41,72,320.94) தொகையும், 2012.08.31 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு காலாவதியாகிய வட்டியையும், மேலும் மேற்குறித்த 1603 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்கூறிய சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் யூனியன் வங்கியிடம் அறவீடு செய்து கொள்வதற்கு உரித்துடைய வேறு எல்லாப் பெறுமதிகளையும் அறவீடு செய்து கொள்வதற்காக மேற்குறித்த 1603 ஆம் இலக்க ஈட்டு முறியின் தத்துவங்களின் மீதும் அதற்கு அமைவாகவும் யூனியன் வங்கியிடம் ஈடுவைக்கப்பட்ட இதன்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளராகிய திரிவங்க அன்ட் சேனாநாயக்க அவர்களுக்கு அதிகாரமளிக்கும்படி 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.’’

### அட்டவணை

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தின் மாரவில பதிவுசெய்யப்பட்ட பிரிவினுள் தெற்கு பிட்டிகல் கோரளே, கம்மல்பற்று, கிழக்கு தும்மலதெனியே அமைந்துள்ள மாதன்கஹ ஓவிட்ட மற்றும் கலயாய மறுபெயர் கெட்டகேலகஹவத்த என்னும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். சுமித் ஏ. பெர்னாந்து அவர்களால் அளந்து தயார் செய்யப்பட்ட 8530 ஆம் இலக்க 2011.08.13 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் துண்டு இல. 1, 2, 3, 4, 5 மற்றும் 6 பிரித்தொதுக்கப்பட்ட நிலபரப்புகளுக்கு எல்லை கள் - வடக்கே: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ரஞ்சித்

அவர்களால் அளந்து தயார் செய்யப்பட்ட 8531 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு இல. 4 மற்றும் எஸ். கே. த சில்வா என்பவர் உரிமை கோரும் காணி ; தெற்கே : அநுர சம்பத் என்பவர் உரிமை கோரும் காணி ; மேற்கு : வீதி அபிவிருத்திஅதிகார சபையின் கொழும்பு - சிலாபம் பெருந்தெரு ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள காணியில் இருபத்தேழு தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சசுகள் (0ஏ. 0றூ. 27.95பே.) விசாலமான காணித்துண்டுகளும் அதன்கண் மரங்கள், பயிர்கள்உட்பட அனைத்தும்.

மேற்குறித்த காணியானது கீழே விபரிக்கப்படுகின்ற காணிகளின் ஒன்றிணைப்பாகும்:-

4. வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தின் மாறவில பதிவுசெய்யப்பட்ட பிரிவினுள் தெற்கு பிட்டிகல் கோரளே, கம்மல்பற்று, கிழக்கு தும்மலதெனியே அமைந்துள்ள மாதன்கஹ ஓவிட்ட மற்றும் கலயாய மறுபெயர் கெட்டகேலகஹவத்த என்னும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ரஞ்சித் யாபா அவர்களால் அளந்து தயார் செய்யப்பட்ட 8531 ஆம் இலக்க 2003.02.21 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் 2 மற்றும் 3 ஆம் இலக்கங்களைக் கொண்ட பிரித்தொதுக்கப்பட்ட நிலபரப்புகளுக்கு எல்லைகள் - வடக்கே: துண்டு இல. 1 ; கிழக்கே : துண்டு இல. 4 ; தெற்கே : சுமேதா மற்றும் ரஞ்சன் என்பவர்களின் காணி ; மேற்கே : வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள காணியில் ஒன்பது தசம் ஐந்து (0ஏ. 0றூ. 9.5பே.) விசாலமான காணித்துண்டுகள் மற்றும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், உட்பட அனைத்தும் இவ்வாதனம் மாறவில காணி பதிவகத்தில் G 120/233 இரு மடிதாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தின் மாறவில பதிவுசெய்யப்பட்ட பிரிவினுள் தெற்கு பிட்டிகல் கோரளே, கம்மல்பற்று, கிழக்கு தும்மலதெனியே அமைந்துள்ள மாதன்கஹ ஓவிட்ட மற்றும் கலயாய மறுபெயர் கெட்டகேலகஹவத்த என்னும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். திசாநாயக்க அவர்களால் அளந்து தயார் செய்யப்பட்ட 1621A இலக்க 2001.12.14 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் 3, 4, 5 மற்றும் 6 ஆம் துண்டு இலக்கங்களைக் கொண்ட பிரித்தொதுக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்கு எல்லைகள் - வடக்கே: துண்டு இல. 1 மற்றும் 2 ; கிழக்கே : இக்காணியின் ரீ. எச். ஆர். பேர்னாட் அப்புஹாமி என்பவருக்குரிய பகுதி ; தெற்கே : சீ. எம். சார்லி என்பவரின்காணி ; மேற்கு : கொழும்பிலிருந்து சிலாபம் வரையிலான வீதி ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள காணியில் பதினெட்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 18.5பே.) விசாலமான காணித்துண்டுகளும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், உட்பட அனைத்தும் இவ்வாதனம் மாறவில காணி பதிவகத்தில் G 90/232 இரு மடித்தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6. வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தின் மாறவில பதிவுசெய்யப்பட்ட பிரிவினுள் தெற்கு பிட்டிகல் கோரளே, கம்மல்பற்று, கிழக்கு தும்மலதெனியே அமைந்துள்ள மாதன்கஹ ஓவிட்ட மற்றும் கலயாய மறுபெயர் கெட்டகேலகஹவத்த என்னும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். திசாநாயக்க அவர்களால் அளந்து தயார் செய்யப்பட்ட 1621A இலக்க 2001.02.14 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் 1 மற்றும் 2 ஆம் துண்டு இலக்க பிரித்தொதுக்கப்பட்ட நிலபரப்புக்கு எல்லைகள் - வடக்கே: சீ. ஜயலத் என்பவர் உரிமை கோரும் காணி ; கிழக்கே : இக்காணியின் ரீ. எச். ஆர். பேர்னாட் அப்புஹாமி என்பவருக்குரிய பகுதி ; தெற்கே : துண்டு இல. 3; மேற்கே : கொழும்பிலிருந்து சிலாபம் வரையிலான பெருந்தெரு ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள காணியில் இரண்டு தசம் ஒன்று ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 2.16பே.) விசாலமான காணித்துண்டுகளும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், உட்பட அனைத்தும் இவ்வாதனம் மாறவில காணி பதிவகத்தில் G 164/104 இரு மடித்தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்குறித்த 8531 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இல. 1 இன் மேல் பயணம செய்யும் பாதை உரிமையுடனும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். டி. என். எஸ். கன்னங்கர,
பணிப்பாளர் சபைச் செயலாளர்.

5- 686